# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு 1 – 2018

### அரசியலமைப்புச் சட்டம் 1
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "'சட்டவாட்சி' மற்றும் 'அரசியலமைப்பபிமாணியம்' எனும் கருத்தேற்புகள் பல விடயங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றதெனினும் நடைமுறைச் செயற்பாட்டில் அவை தத்தமக்குரிய வேறுபட்ட கரிசனைகளைக் கொண்டுள்ளன."

   இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? இயைபான உதாரணங்களைப் பயன்படுத்தி இந்த இரு நெறிகளின் நோக்கெல்லையை ஆராய்க.

2. இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பும் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பும் வலு வேறாக்கத்தை அங்கீகரித்திருக்கின்ற போது இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு இதற்கு எதிரானதையே பின்பற்றியது என வாதாடப்படுகின்றது.

   மேற்படி கூற்றின் பின்னணியில் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டவியலைத் தொடர்புபடுத்தி அரசியலமைப்புச்சார் அரசாங்கம் ஒன்றில் வலுவேறாக்கத்தின் முக்கியத்துவத்தை ஆராய்க.

3. "அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தமானது, நாட்டிலுள்ள சட்டவாக்கற்றுறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை மீதாக சனாதிபதி கொண்டிருந்த அரசியலமைப்புத் தத்துவங்களைப் பலவீனப்படுத்தியுள்ளது."

   நீர் உடன்படுகிறீரா? இந்தக் கூற்றானது எத்துணையளவு தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கின்றது? அரசியலமைப்பின் இயைபான ஏற்பாடுகளை ஆராய்ந்து உமது விடையை ஆதாரப்படுத்துக.

தொடர்ச்சி -2-

4. சட்டபீட மாணவர் சங்கமானது தற்போதைய அரசியலமைப்புச் சீர்திருத்த நடபடி தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விரிவுரைகளை நடாத்துகின்றது எனக் கருதிக் கொள்ளவும். அத்துடன் "அரசியலமைப்பு ஆக்கத்தின் பொருளடக்கம் மற்றும் நடபடிமுறை" என்ற தொனிப்பொருளில் விரிவுரை நிகழ்த்த நீர் சங்கத்தால் அழைக்கப்பட்டிருக்கின்றீரெனவும் கருதிக் கொள்ளவும். நாட்டில் தற்போது முன்னெடுத்துவரப்படும் அரசியலமைப்பு ஆக்க நடவடிக்கைகள் மீது வலியுறுத்தக் கோரப்படுகின்றீர்.

இலங்கையின் 1ஆம் மற்றும் 2ஆம் குடியரசு அரசியலமைப்புக்களிலிருந்து உதாரணங்களைப் பெற்று, உத்தேச புதிய அரசியலமைப்பில் காணப்படவேண்டிய மூன்று பிரதான குணாம்சங்களை அல்லது இலங்கையானது தாராள அரசியலமைப்புச்சார் சனநாயகமாகத் திகழவேண்டுமாயின் அரசியலமைப்பு ஆக்கத்தில் பின்பற்றப்பட வேண்டிய மூன்று பிரதான அம்சங்களை ஆராய்க.

5. அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொது ஒழுங்கு குலைவுகளால் கலக்கமடைகின்ற அரசாங்கமானது "அராஜகத்தைத் தடுத்தல் மற்றும் பொது ஒழுங்கை மேம்படுத்தல் சட்டத்தை" ஆக்குவதற்கான சட்டமூலமொன்றை பிரசுரிக்கின்றது. உத்தேச சட்டத்தின் சில பிரதான அம்சங்களின் விளைவானவை – i) பொது நிருவாகம், சுற்றுலாத்துறை, வனங்கள் மற்றும் வனவிலங்கியல், நீதி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விளையாட்டு, வீடமைப்பு, வெளிவிவகாரம் மற்றும் மக்கள் பயன்பாட்டுச் சேவைகள் பற்றிய அமைச்சுக்களைச் சார்ந்த எந்த அரசாங்க அலுவலரோ அல்லது அலுவலர்களைக் கொண்ட தொழிற்சங்கமோ எத்தகைய வேலைநிறுத்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது; ii) வேறு எந்த அரசாங்க அலுவலரோ அல்லது அலுவலர்களைக் கொண்ட தொழிற்சங்கமோ வேலைநிறுத்த நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கம் தொடர்பில் மூன்று மாத முன்னறிவித்தல் வழங்காது எத்தகைய வேலைநிறுத்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது; iii) எந்தவொரு பொது இடத்திலோ, பொது அலுவலகத்திலோ அல்லது பொது வீதிகளிலோ ஆர்ப்பாட்டமோ அல்லது ஊர்வலமோ நடாத்தப்படலாது: ஏதேனும் ஆர்ப்பாட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடாத்தப்படவேண்டின் இரண்டு மாதகால முன்னறிவித்தலுடனும் பொலிசினால் நிர்ணயிக்கப்படுகின்ற இடங்களிலும் காலங்களின் போதுந்தான் அவை நடாத்தப்படலாம்; iv) அரசாங்கத்தின் அலுவலர் எவரும் அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கின்றதான கருத்தையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமுடியாது. மேற்படி ஏற்பாடுகளை மீறுகின்ற நடத்தையை உத்தேச சட்டம் குற்றமாக ஆக்குவதுடன் அதற்குக் கடூழியச் சிறைத்

தொடர்ச்சி -3-

தண்டனை விதிக்கப்படற் பாலதும் மற்றும் குற்றவாளியின் ஆதனத்தைப் பறிமுதல் செய்வதாக்குவதாகவும் ஏற்பாடு செய்கின்றது. அதேவேளை, இந்த ஏற்பாடுகளை மீறக் கூடியதான சந்தர்ப்பத்தில் அந்த மீறலை அடக்குவதற்குப் பொலிசு அலுவலர்கள் அவர்களது அபிப்பிராயப்படி வேண்டியதெனக் கருதும் வலுவைப் பயன்படுத்துவதற்கு அந்தச் சட்டமூலம் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவதுடன் அத்தகைய மீறலுடன் தொடர்புபட்ட எவரையும் சூழ்நிலை வழமைக்குத் திரும்பிவிட்டது என பொலிசு அலுவலர்கள் எண்ணும்வரை எத்தனை நாட்களுக்கும் தடுப்புக்காவலில் வைக்கவும் அதிகாரம் வழங்குகின்றது.

இந்தச் சட்டமூலத்தின் ஏதேனும் மூன்று ஏற்பாடுகளின் அரசியலமைப்புக்கமைவாந் தன்மையைத் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

6. “1978இன் அரசியலமைப்பின் கீழான இலங்கைப் பாராளுமன்றமானது ஓர் மீயுயர் சட்டவாக்கச் சபையாகாது; அன்றேல் பிரித்தானியப் பாராளுமன்றம் அனுபவித்தது போன்ற அல்லது 1972இன் அரசியலமைப்பின் கீழான தேசிய அரசுப் பேரவை அனுபவித்தது போன்ற இறைமைக் கோட்பாட்டை அனுபவிக்கவுமில்லை.”

நீர் உடன்படுகிறீரா? ஆராய்க.

7. நீதித்துறைச் சுதந்திரமானது நீதித்துறையை ஒரு நிறுவனம் என்ற ரீதியில் மாத்திரமன்றி நீதிபதிகளையும் மற்றவர்களையும் நீதித்துறையின் தனியான அலுவலர்கள் என்ற ரீதியிலும் தோதான அரசியலமைப்புக் கட்டமைப்புக்களாலும் பாதகாப்புக்களாலும் பாதுகாக்கப்படுதலை வேண்டிநிற்கின்றது.

நீர் உடன்படுகிறீரா? இயைபான அடிப்படை நெறிகளாலும் அதிகார ஆதாரங்களாலும் உமது விடையை ஆதாரப்படுத்துக.

*****